செய்தி வெளியீடு எண் : 841 நாள் : 05.05.2023

# செய்தி வெளியீடு

தமிழகத்தில் உள்ள 164 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள இளநிலை பட்டப்படிப்பு முதலாமாண்டு மாணாக்கர் சேர்க்கைக்கான (2023-2024) விண்ணப்பங்களை www.tngasa.in என்ற இணையதள முகவரியில் பதிவு செய்யலாம்.

இணையதள வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணாக்கர்கள் கல்லூரி உதவி மையங்கள் (Admission Facilitation Centre - AFC) மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களின் பட்டியல் மேற்குறித்த இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது.

| விண்ணப்பக் கட்டண விவரம் | |
|---|---|
| **(ஒவ்வொரு ஐந்து கல்லூரிகளுக்கும்)**<br>விண்ணப்பக் கட்டணம் – ரூ.48/-<br>பதிவுக் கட்டணம் – ரூ.2/- | **SC/ST பிரிவினருக்கு விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை**<br>பதிவுக் கட்டணம் – ரூ.2/- மட்டும் |

**விண்ணப்பம் மற்றும் பதிவுக் கட்டணம்:** விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்தை விண்ணப்பதாரர்கள் Debit Card/ CreditCard/ Net Banking மூலம் இணையதள வாயிலாக செலுத்தலாம். இணையதள வாயிலாகக் கட்டணம் செலுத்த இயலாத மாணாக்கர்கள் கல்லூரி சேர்க்கை உதவி மையங்களில் "The Director, Directorate of Collegiate Education, Chennai – 15" என்ற பெயரில் 08/05/2023 அன்று அல்லது அதற்குப் பின்னர் பெற்ற வங்கி வரைவோலை அல்லது நேரடியாகவும் செலுத்தலாம். மாணாக்கர் சேர்க்கை வழிகாட்டி மற்றும் கால அட்டவணையை மாணாக்கர்கள் மேற்குறித்த இணையதளங்கள் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

| | |
|---|---|
| **இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்யத் துவங்கும் நாள்** | **08.05.2023** |
| **இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய இறுதி நாள்** | **19.05.2023** |

**தொடர்பு எண் : 1800 425 0110**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**